**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்**

(PB67)

**கூட்டம் பற்றிய அறிவித்தல்**

**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் அதிவிசேட பொதுக் கூட்டமொன்று** பின்வரும் நோக்கங்களுக்காக சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை அறையிலிருந்து மெய்நிகர் கூட்டமொன்றாக 2024 யூன் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடத்தப்படவுள்ளமை தொடர்பில் **இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.**

**நிகழ்ச்சிநிரல்**

1. பின்வரும் தீர்மானத்தினைப் பரிசீலனையில் கொள்வதற்கும் பொருத்தமானதாக இருக்குமிடத்து **சாதாரணமான தீர்மானமொன்றாக** நிறைவேற்றுவதற்கும்,

   இத்தால் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தினை பங்கொன்று ரூ.100 என்ற அடிப்படையில் 50 மில்லியன் புதிய சாதாரண பங்குகளை உருவாக்குவதன் மூலமாக இத்தால் இல.ரூ.198,860,665,500 இலிருந்து இல.ரூ.203,860,665,500 இற்கு அதிகரிப்பதற்கும் இல.ரூ.5 பில்லியன் கொண்ட பங்குரிமை மூலதன உள்ளீட்டினைப் பெற்றுக்கொள்வதனை ஏற்றுக்கொள்கின்ற விதத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு புதிய சாதாரண பங்குகளை ஒதுக்குவதற்கும் **இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.**

2. பின்வரும் தீர்மானத்தினைப் பரிசீலனையில் கொள்வதற்கும் பொருத்தமானதாக இருக்குமிடத்து **விசேட தீர்மானமொன்றாக** நிறைவேற்றுவதற்கும்

   ‘எழுத்திலுள்ளவை’ அல்லது ‘எழுதப்பட்டவை’, ‘பங்குடமையாளர்’ என்ற சொற்களின் பொருள்கோடலை உள்ளடக்குவதன் மூலமும் மற்றும் ‘உறுப்பினர்’ என்ற **சொல்லில்** பொருள்கோடலுக்குப் பதிலீடாகவும் தற்போதுள்ள உறுப்புரைகள் 52, 54 மற்றும் 155 – 161 என்பனவற்றை நீக்கிவிடுவதற்கும் இதன் கீழுள்ள 52, 54 மற்றும் 155 – 161 உறுப்புரைகளைப் பதிலீடு செய்வதற்கும் **இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| ‘எழுத்திலுள்ளவை’ அல்லது ‘எழுதப்பட்டவை’ | அச்சிடப்படுகின்றவை மற்றும் சொற்களை கட்புலனாகக்கூடிய விதத்தில் அத்தகைய ஏனைய மாதிரிகளைப் பிரசன்னப்படுத்துகின்ற விதத்தில் மீளத் தயாரிக்கப்படுகின்ற சொற்கள் |
| ‘உறுப்பினர்’ | என்பதன் அர்த்தம் அத்தருணத்தில் கம்பனியிலுள்ள எவரேனும் பங்குடமையாளர் என்பதாகும் |
| ‘பங்குடமையாளர்’ | சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அதே அர்த்தத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் |

அறிவித்தல்

52. விசேட தீர்மானமொன்றினை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் பொதுக் கூட்டம் அல்லது (சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின்படி) கம்பனியின் உறுப்பினர்கள் பிரசன்னமாக வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்ற தீர்மானம் பத்து வேலை நாட்களுக்கு முன்னதாக எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வேறு ஏதேனும் பொதுக் கூட்டங்கள் (ஆண்டுப் பொதுக் கூட்டம் நீங்கலாக) எழுத்து மூலம் பத்து வேலை நாள் அறிவித்தல் மூலம் தெரியப்படுத்தப்படல் வேண்டும் (ஒவ்வொரு நாளினையும் பொறுத்தவரை, இது வழங்கப்படுவதற்கு அல்லது வழங்கப்பட வேண்டும் எனக் கருதப்பட்ட அத்துடன் அது வழங்கப்பட்ட நாள் நீங்கலாக) எனத் தேவைப்படுத்தப்பட்டதுடன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினைப் பொறுத்தவரை, இவ்வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தன்மைகளைக் கருத்திற்கொண்டு, கம்பனியிலிருந்து அத்தகைய அறிவித்தல்களைப் பெறுவதற்கு உரித்துடைய அத்தகைய உறுப்பினர்களுக்கும் கணக்காய்வாளர்களுக்கும் இவ்வாசகங்களின் ஏற்பாடுகளிலுள்ளவாறு பதினைந்து நாள் அறிவித்தலை எழுத்து மூலம் வழங்குதல் வேண்டும்.

குறுகிய கால அறிவித்தல்

பொதுக் கூட்டமாக இருந்து அது மேலே குறித்துரைக்கப்பட்டதிலும் பார்க்க குறுகியதொரு அறிவிப்பாக இருப்பினும் கூட, அது:

(i) ஆண்டு பொதுக் கூட்டத்தினைப் பொறுத்தவரை கலந்து கொண்டு வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைத்து உறுப்பினர்களினாலும் அத்துடன்

(ii) வேறு ஏதேனும் பொதுக் கூட்டத்தினைப் பொறுத்தவரையில் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அனைத்து உறுப்பினர்களும் அல்லது கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கத் தகுதிபெற்ற உரிமை கொண்ட உறுப்பினர்களில் பெரும்பான்மையினராலும்

அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அது முறையாக அழைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

அறிவித்தலின் உள்ளடக்கம்

54. பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கின்ற ஒவ்வொரு அறிவித்தலும் கூட்டம் இடம்பெறும் இடம், நாள் மற்றும் நேரம் என்பனவற்றைக் குறிப்பிடல் வேண்டும். அந்த இடம் என்பது செவிப்புல அல்லது கட்புல மற்றும் கட்புல தொடர்பூட்டலூடாக மெய்நிகர்/ நிகழ்நிலை இடவசதியினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வறிவித்தல் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் தகுதியுடைய ஆளொருவர் அவருக்குப் பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கும் உரித்துடையவராவர் என்பதனை நியாயமானளவு முக்கியத்துவமளித்து வெளியிட்டிருத்தலும் வேண்டும். அத்துடன் பதிலாள் கம்பனியின் உறுப்பினராக இருத்தல் வேண்டுமென்ற அவசியமில்லை.

155. நிறுவனம் உறுப்பினர்களுக்கு ஏதேனும் ஆவணத்தினை அனுப்ப வேண்டிய தேவை அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில் அறிவித்தலை வழங்க வேண்டிய தேவையிருப்பின் அதனை கம்பனி அத்தகைய உறுப்பினரின் இறுதியாக அறியப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். ஆவணம் அல்லது அறிவித்தலொன்று கம்பனியின் வெப்தளத்தின் மூலம் அல்லது மெய்நிகர் செய்தி தொடர்பு வழி மூலம் கம்பனியினால் அறிவிக்கப்பட்டவாறு செய்தித்தாள்களூடாக பொதுமக்களுக்கான அறிவித்தல் மூலம் அஞ்சல் செய்யப்பட்டிருக்குமிடத்து அவ்வறிவித்தலும் அனுப்பப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். சாதாரண அஞ்சலில் அனுப்பப்படும் ஏதேனும் ஆவணம் அல்லது அறிவித்தல் சரியாக முகவரியிடப்பட்டு அஞ்சலில் சேர்க்கப்பட்ட மூன்று வேலை நாட்களில் உறுப்பினரால் பெறப்படும் எனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் ஆவணங்கள் அல்லது அறிவித்தல்களை உள்ளடக்கிய முன்கூட்டிய கட்டணம் செலுத்தப்பட்ட கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல் அல்லது வேறு இணையத்தள தொடர்பூட்டல்கள் ஊடாக இறுதியாக அறியப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது கம்பனியின் வெப்தள முகவரிக்கு அஞ்சலிடப்படும் போது அல்லது விடயத்தினைப் பொறுத்து வேறு ஏதேனும் மெய்நிகர் செய்தி தொடர்பு வழி அஞ்சலிடப்படும் போது அது உறுப்பினர்களினால் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

வெளிநாட்டில் வதியும் உறுப்பினர்கள் இலங்கையிலுள்ள முகவரியொன்றினை அறிவிக்க முடியும்

156. உறுப்பினரொருவரின் பதிவுசெய்யப்பட்ட முகவரி இலங்கைக்கு வெளியே இருப்பின் விடயத்தினைப் பொறுத்து அவர் அறிவித்தல் நோக்கங்களுக்காக இலங்கையிலுள்ள முகவரியொன்றினை அல்லது மின்னஞ்சல் முகவரியொன்றினை கம்பனிக்கு அறிவித்தல் வேண்டும். இது அவரது பதிவுசெய்யப்பட்ட முகவரியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

கூட்டு உடமைகள் தொடர்பில் அறிவித்தல்களை வழங்குதல்

157. கூட்டு உடமையினைப் பொறுத்தவரை, அனைத்து அறிவித்தல்களும் கூட்டு உடமையாளர்களில் உறுப்பினர் பதிவேட்டில் முதலில் காணப்படுபவரின் பெயருக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வழங்கப்படும் அறிவித்தல், விடயத்தினைப் பொறுத்து அனைத்துக் கூட்டு உடமையாளர்களுக்கும் போதுமான அறிவித்தலாகக் கருதப்படல் வேண்டும்.

உறுப்பினரின் மரணம் அல்லது வங்குரோத்து நிலைமைக்குப் பின்னர் அறிவித்தல்களை வழங்குதல்

158. உறுப்பினரொருவரின் மரணம் அல்லது வங்குரோத்து நிலைமையின் விளைவாக பங்கொன்றிற்கு உரித்துடைய ஆளொருவர் கம்பனிக்கு அத்தகைய சான்றுகளை வழங்குவதன் மேல் சபையானது அவரின் பங்கிற்கான உரித்தினைக் காட்டுமாறும் அறிவித்தல்களை வழங்கும் விதத்தில் இலங்கைக்குள் முகவரியொன்றினை வழங்குமாறும் நியாயமான முறையில் அவரைக் கேட்டுக் கொள்ளலாம். இதன் மூலம் அத்தகைய முகவரிக்கு அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் வழிமுறைகளின் மூலமாக ஏதேனும் அறிவித்தல்களை அல்லது ஆவணங்களை உறுப்பினரின் மரணம் அல்லது வங்குரோத்து நிலைமை காரணமாக உரித்தினைப் பெற்றவருக்கு அனுப்பி வைப்பதற்கு உரித்துடையவராவர் என்பதுடன்

பங்குகளில் ஈடுபாடு கொண்டுள்ள அனைத்து ஆட்கள் தொடர்பிலும் (கூட்டு உடமையாக அல்லது கோரலூடாக அல்லது அவரின் கீழ்) அனுப்பி வைக்கப்படும் அத்தகைய அறிவித்தல்கள் அல்லது ஆவணங்கள் போதுமானவையாகக் கருதப்படுதல் வேண்டும். வாசகங்களைப் பின்பற்றுகின்ற விதத்தல் உறுப்பினரொருவருக்கு மேலே குறிப்பிடப்பட்டவாறான ஏதேனும் அறிவித்தல் அல்லது ஆவணம் அஞ்சல் மூலமாக அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் வழிமுறையின் மூலம் விநியோகிக்கப்பட்டிருப்பின் அல்லது உறுப்பினரின் பதிவுசெய்யப்பட்ட முகவரியில் ஒப்படைக்கப்பட்டிருப்பின் அத்தகைய உறுப்பினர் அந்த நேரத்தில் ஒன்றில் மரணமடைந்திருப்பினும் அல்லது வங்குரோத்து நிலையினை அடைந்திருப்பினும் அல்லது அவரின் மரணம் அல்லது வங்குரோத்து நிலைமை பற்றி கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும் அல்லது இல்லையெனினும் உறுப்பினரின் பெயரில் அல்லது ஏக அல்லது கூட்டு உடமையாளரான அத்தகைய உறுப்பினரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் பங்குகள் சரியான முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படல் வேண்டும்.

**பதிவுசெய்யப்பட்டிராத முகவரியினைக் கொண்டிராத உறுப்பினர்கள் தொடர்பான அறிவித்தல்கள்**

159. உறுப்பினரொருவர் அவருக்கு அறிவித்தல்களை வழங்குவதற்கான பதிவுசெய்யப்பட்ட முகவரியினை அல்லது மின்னஞ்சல் முகவரியினை கம்பனிக்கு வழங்கவில்லையாயின் கம்பனியின் வெப்தளத்திற்கு அல்லது மெய்நிகர் செய்தி தொடர்பு வழிக்கு அஞ்சலிடப்பட்ட, அறிவித்தல் விடயத்தினைப் பொறுத்து, அவருக்குச் சரியான முறையில் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**விளம்பரம் மூலமான அறிவித்தல்**

160. உறுப்பினர்களுக்கு கம்பனியினால் வழங்கப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படும் எந்தவொரு அறிவித்தலும் விளம்பரத்தின் மூலம் வழங்கப்பட்டிருப்பின் அது போதுமானதாகக் இருத்தல் வேண்டும்.

**விளம்பரத்தின் மூலம் அறிவித்தலை வழங்கும் மாதிரி**

161. எந்தவொரு அறிவித்தலும் சட்டத்தின் மூலம் தேவைப்பட்டிருந்தாலொழிய, விளம்பரம் மூலம் அறிவிக்கப்பட வேண்டிய எந்தவொரு அறிவித்தலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பத்திரிகைகளில் ஒரு முறை விளம்பரப்படுத்தப்படல் வேண்டும்.

சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, விடயத்தினைப் பொறுத்து அமைப்பு அகவிதியின் எஞ்சியுள்ள உறுப்புரைகளும் துணை உறுப்புரைகளும் மாற்றமின்றியிருத்தல் வேண்டும்.

சபையின் கட்டளைப்படி
**சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்**

தல்றின் திருக்குமார்
**கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைவர்/ கம்பனிச் செயலாளர்**

2024 மே 17

1. மெய்நிகர் **அதிவிசேட பொதுக் கூட்டத்தில்** பங்கேற்பதற்கும் வாக்களிப்பதற்கும் தகைமைபெற்ற உறுப்பினரொருவர் உறுப்பினருக்குப் பதிலாக பங்கேற்பதற்கும் வாக்களிப்பதற்கும் பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கு தகைமையுடையவராவார். அத்தகைய பதிலாள் உறுப்பனராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

2. செல்லுபடியாக்குவதற்கு, பதிலாளின் பூரணப்படுத்தப்பட்ட படிவத்தினை மெய்நிகர் **அதிவிசேட பொதுக் கூட்டம்** நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாக ஒன்றில்:-

2.1 சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட், எயார்லையின் சென்ரர், பண்டாரநாயக்கா சர்வதேச நிலையம், கட்டுநாயாக்காவிலுள்ள கம்பனிச் செயலாளரின் அலுவலகத்தில் அஞ்சல் மூலம் அல்லது நேரடியாக விநியோகிக்கப்படுதல் வேண்டும் **அல்லது**

2.2 ஸ்கான் செய்யப்பட்டு comsec@srilankan.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யப்படல் வேண்டும்.